# சுதா ரகுநாதனுடன் சேர்ந்து செடிகளும் இசை ப

**சென்னை, பிப். 11:** கர்நாடக இசைக் கலைஞர் சுதா ரகுநாதனு டன், செடிகள் 'சேர்ந்திசைக்கும்' (கோரஸ்) அரிய நிகழ்ச்சி திங்கள்கி ழமை நடைபெற்றது.

இத்தாலியில் உள்ள 'டாமன்ஹர்' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் தாவரங்களின் இசை' என்ற பெய ரில் புதிய கருவியை வடிவமைத் துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள தெற்கு ஃபுளோரிடா பல்கலைக்கழகம் இக் கருவியை அங்கீகரித்திருப்பதுடன், அதற்கு 'பேட்டண்ட்' உரிமையை யும் வழங்கியுள்ளது. வணிக ரீதி யாக இன்னும் ஓராண்டில் குறைந்த விலைக்கு இக் கருவி சந்தையில் அறிமுகமாகும்.

செடிகளின் இலை, தண்டு, வேர் ஆகியவற்றை வயர் மூலம் இக் கரு வியுடன் இணைத்து, நாம் பாடி னால், அதற்கு நாங்களும் சளைத்த வர்கள் அல்ல! என்பது போல செடிகளும் சேர்ந்து இசைக்கின் றன.

**இன்னிசைப் பிரவாகம்:** செடிக ளில் இருந்து வெளிப்படும் மின் காந்த அதிர்வு அலைகள், ஒலி அலைகளாக மாற்றப்பட்டு பின் இன்னிசையாக ஊற்றெடுக்கிறது.

சிபிஐ முன்னாள் இயக்குநர் டி.ஆர். கார்த்திகேயன் முன்னி லையில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த வியப்பூட்டும் நிகழ்ச்சியை ஏராளமான ரசிகர் கள் கண்டும் -கேட்டும் ரசித்த னர்.

முதலில் மேஜையில் வைக்கப்பட் டிருந்த செடிகளுக்கு சிறிது தண் ணீர் ஊற்றப்பட்டது.

உடனே, கர்நாடக இசைக் கலை ஞர் சுதா ரகுநாதன் தனது வெங்க லக் குரலில் கணீரென 'வசந்தி' ராகத்தைப் பாடத் தொடங்கினார்.

செடிகளும் உற்சாக 'சிம்பொனி' போல இன்னிசை எழுப்பின.

இந்த அதிசயத்தைக் கண்டு அசந்து போன, சுதா ரகுநாதன் உடனே காப்பி, சிந்து பைரவி, ஹம் சத்துவனி, மோகனம்...என ராக மழை பொழிந்தார்.

மான சஞ்சரரே...என்ன தவம் செய்தனை...என்று சுதா ரகுநாதன் பாடிய பாடல்களைக் கேட்டு, 'ரசிக மஹா ஜனங்களைப்' போல செடிக ளும் 'சேர்ந்திசை' எழுப்பின.

இதைத் தொடர்ந்து, இத்தாலி யின் டேமன்ஹர் அமைப்பைச் சேர்ந்த இளம் பெண்களான எஸ் பெரிடே, மாக்காகோ ஆகியோரது 'ஜாஸ்' இசை, அரங்கில் வழிந்தோ டியது. செடிகளும், விட்ட பாடில்லை...ஆரோகணத்திலும், அவரோகணத்திலும் இசையெழுப் பின.

இதைக் கண்டு ஆச்சரியம் அடைந்த குழந்தைகள் முதல் பெரி யவர்கள் வரை அனைவரும், நிகழ்ச்சியின் நிறைவாக இருக் கையை விட்டு எழுந்து நின்று கர கோஷம் எழுப்பி பாராட்டுத் தெரி வித்தனர்.

இதுகுறித்து சுதா ரகுநாதன் கூறி யதாவது:

செடிகளுக்கும் இசையறிவு உண்டு என்பதை நிருபிக்கும் வகை யில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக் கிறது.

தனித்துவம் மிக்க இசையில் தாவ ரங்களுக்கும் ரசனையுண்டு. மோகன ராகத்தில் நான் பாடிய போது செடிகள் அந்த ராகத்தை அப்படியே வெளிப்படுத்தின. இனி, நாம் வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கலாம் என்றார் சுதா ரகுநா தன்.



சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற 'செடிகளின் சங்கீதம்' நிகழ்ச்சியில் இன்னிசை மழை பொ
பாடகி சுதா ரகுநாதன். உடன் (இடமிருந்து) இத்தாலிய டாமன்ஹர் அமைப்பைச் சேர்ந்த பாடகி எஸ்பெ
சிபிஐ முன்னாள் இயக்குநர் டி.ஆர். கார்த்திகேயன், டாமன்ஹர் பிரதிநிதி மாக்கா